# காதியானி தேவுபந்தி சம்பாஷணை

மேல் கூறிய சம்பாஷணையை ஆரம்பிக்கும் முன் 'தேவுபந்தி' என்பது யார்?; என்பதை விளக்குகிறேன். வஹ்ஹாபிகள் இரு கூட்டத்தினர்களாவார்கள். ஒரு கூட்டத்தார் 'வஹ்ஹாபிக் கொள்கையின் ஸ்தாபகரான முஹம்மது இபுனு அப்துல் வஹ்ஹாபு நஜ்தியையும், வஹ்ஹாபிஸத்தை இந்தியாவில் முதன் முதலாகப் பரப்பிய இஸ்மாயில் திஹ்லவியையும் முற்றிலும் பின்பற்றி கைற முகல்லிது (இமாம்களைப் பின்பற்றாத) வஹ்ஹாபிகளாவார்கள். மற்றக் கூட்டத்தார் நஜ்தி வஹ்ஹாபித் தலைவரை கொள்கை விசயத்தில் முற்றிலும் பின்பற்றி நடப்பதோடு கிரியைகள் விசயத்தில் இமாம்களை பின்பற்றி தங்களை ஹனபி, ஷாபிஈ, மாலிகி, ஹம்பலி என்றும் சொல்லக் கூடிய வஹ்ஹாபி முகல்லிதுகளாவார்கள். இவர்களின் தலைவர்கள் முகம்மது காசிம் நானூத்தவி, றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலிதானவியாவார்கள். இவர்கள் தேவுபந்து எனும் நகரிலுள்ள தாறுல் உலூம் எனும் மதரஸாவின் ஸ்தாபகரும் அதன் பிரதான ஆசிரியர்களுமாக இருந்து அம் மதாஸாவில் அந்தக் கெட்ட கொள்கைகளைப் பின்பற்றியவர்களுக்கும் இவர்கள் எத் தேசத்தினரானாலும் சரியே தேவுபந்திகள் என்று வழங்கப்படுகிறது.

தப்லீக்கின் ஸ்தாபகர் மவுலவி இல்யாஸ் காந்திலவி அப்துஷ்ஷகூற் காக்கூறவி, மஹ்மூது ஹஸன் தேவுபந்தி, அப்துற்றஹீம் றாயப்பூரி, மவுலவி கிபாயத்துல்லாஹ் ஷாஜகான்பூரி, தையிபு தேவுபந்தி, ஷப்பீர் அஹ்மது உத்மானி, ஹுஸைன் அஹ்மது 'மதனி' அஜூதயாபாஷி, மன்ளுர் ஹுஸைன் ஸம்பேலி, அபுல்ஹஸன் நத்வி, மவுலவி இல்யாஸின் மகன் யூசுபு இவர்களெல்லாம் இந்தக் இந்தக் கூட்டத்தை சேர்ந்தவர்களேயாவர்கள்.

ஒரு பெரியார் சொல்கிறார்கள் நான் பரேலியிருந்து அஜ்மீர் சரீபு வழியாக குஜராத்துக்கு வந்து கொண்டிருந்தேன். பந்திகோயா எனும் ஸ்டேஷனில் ஒரு காதியானியும் ஒரு தேவுபந்தியும் ரயிலில் ஏறினார்கள். அவர்களிருவருக்குள் நடந்த சம்பாஷணை மனத்திற்கு வெகு ரம்மியமாகவே இருந்தது. ஆகையால், என் ஞாபகத்தில் உள்ளமட்டிலும் அதை எழுதிகிறேன்.

**தேவுபந்தி:-** காதியானியைப் பார்த்து நண்பா! தாங்கள் எங்கே போகிறீர்கள்?.

**காதியானி:-** ஜனாப்! நான் பரோச்சி ஜில்லாவில் சுண்ணாம்பு, கரி முதலிய வியாபாரத்திற்காக போய் வருவேன். அங்கே தான் போகிறேன.; அஹ்மதாபாத்தில் கொஞ்சம் ஜோலியிலிருந்து அதற்காக அங்கு போய் வருகிறேன். தாங்கள் எங்கே போகிறீர்கள்?

**தேவுபந்தி:-** ஜீ! நான் ஸூரத்து ஜில்லா றாந்தேருக்கு போகிறேன். தானாபூன் போயிருந்தேன். ஹகீமுல் உம்மத் மவுலானா அஷ்ரப் அலி சாகிபு அவர்களிடம் முரீதாகிவிட்டு வருகிறேன். தாங்கள் யாருடைய முரீது?

**காதியானி:-** ஜனாப்! நான் ஹளரத்தே அக்தஸ் (பரிசுத்த சமூகம்) மஸீஹே மௌவூது (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி சாகிபு உடைய முரீதாகும்.

**தேவுபந்தி:** அஸ்தஃபிருல்லாஹ்! லா ஹௌல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ். மஆதல்லாஹ்!(அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்)

**காதியானி:-** ஏன்? ஜனாப்! உங்களுக்கு இவ்வளவு கோபம் வந்து விட்டது? கைற். நல்ல சுகம்தானே!

**தேவுபந்தி:** நீங்கள் அந்தக் காபிர், முற்தத்தான மிர்ஜா காதியானியிடமல்லவா முரீதாகியிருக்கிறீர்கள். பின்னர் கோபத்திற்கு காரணமுமா கேட்கிறீர்கள்?

**காதியானி:** கோபப்படுவதில் வேலையில்லை. மிர்ஜா சாகிபிடத்தில் ஏதும் குப்ரிய்யத்தான கருமங்கள் இருப்பதாக உங்களுக்குத் தெரிந்தால் அதை சொல்லி காட்டுங்கள்.

**தேவுபந்தி:** ஜீ! உங்களுடைய மிர்ஜாவிடம் குப்ரியத்தான கருமம் ஒன்றா இருக்கிறது? அவர் நூற்றுக்கணக்கான குப்ரியத்தான வார்த்தைகளை உளறியிருக்கிறார்.

**காதியானி:** நான் திரும்பவும் சொல்கிறேன.; நீங்கள் ஏன் கோபப்படுகிறீர்கள்? மிர்ஜா சாகிபுடைய குப்ரியத்தான வார்த்தைகளில் ஏதாவது ஒன்றையாகிலும் சொல்லிக்காட்டுங்கள்.

**தேவுபந்தி:** நீங்கள் இப்போது இதையே பாருங்கள.; மிர்ஜா சாகிபு தனது 'தாபி உல்பலா' எனும் நூல் 15ம் பக்கத்தில் எழுதிகிறார். 'அல்லாஹ் அம்மாதிரியான மனிதரை (கருத்த ஈஸா அலைஹி மிஸ்ஸலாம்) எப்படி துன்யாவில் மீண்டும் கொண்டுவரமுடியும்? அவருடைய முந்திய குழப்பம் துன்யாவையே நாசமாக்கிவிட்டதே! 'பாருங்கள் இந்த வாசகத்தில் ஈஸா அலைஹி மிஸ்ஸலாம் அவர்களை துன்யாவில் மறுமுறை கொண்டுவர அல்லாஹ்வுக்கு இயலாது என்று அல்லாஹ்வை ஆஜிஸு (இயலாத்தவன்) என்று மிர்ஜா சொல்கிறார்.

**காதியானி:-** ஆண்டவனை அஜிஸ் ((இயலாத்தவன்) என்று சொல்வது குப்ராக இருந்தால் உங்களின் மவுலவி ரஷீது அஹ்மது அல்லாஹ்வைப் பொய்யன் என்று எழுதி இருக்கிறாரே! மிர்ஜா சாகிபு காபிராக இருந்தால் உங்கள் கொங்கோ ஹிஜீயும் காபிராகத்தானே ஆகுவார். கொங்கோஹி முஸ்லிமாக இருந்தால் மிர்ஜா சாகிபும் முஸ்லிமாகத்தானிருக்கும்.

**தேவுபந்தி::-** (ஜவாபு சொல்ல இயலாமல்) இதோ பாருங்கள். மிர்ஜா காதியானி ஈஸா அலைஹி மிஸ்ஸலாம் அவர்களை ரொம்பக் கடுமையாக ஏசி பேசி இருக்கிறார்.

**காதியானி:-** மிர்ஜா சாகிபு ஈஸா அலைஹி மிஸ்ஸலாம் அவர்களைக் குறைவாகப் பேசியிருந்தால், தேவுப்பந்திகள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைக் கடுமையாக ஏசிப் பேசியிருக்கிறார்களே. உங்கள் கொங்கோஹி ஜீ :பறாஹீனே காதிஆ' எனும் நூல் 51ம் பக்கத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய அறிவை ஷைத்தான் மல்ஊனுடைய அறிவை விடவும் குறைவானதென்று எழுதியிருக்கிறார்கள். உங்களின் குரு அஷ்ரப் அலி தானவி தனது 'ஹிப்ளுல் ஈமான்' எனும் நூல் 8ம் பக்கத்தில் நயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய அறிவை மதளைகள், பேயன், பைத்தியக்காரன் இன்னும் மிருகங்களுடைய அறிவுக்கு ஒப்பானதென்று

எழுதியிருக்கிறார்;. இதுகளன்றி இன்னும் அநேக வாசகங்களுமிருக்கின்றன. ஈஜா அலைஹி மிஸ்ஸலாம் அவர்களைக் குறைவாக எழுதுவதும் குப்ராகவே ஆகும். மிர்ஜா சாகிபு காபிரென்று ஆனால் றஷீது அஹ்மது கொங்கோஹி, கலீல் அஹ்மது அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி இவர்களும் கண்டிப்பாகக் காபிராகவே ஆகுவார்கள். இவர்கள் காபிர்களில்லை யென்றால் அவரும் காபிரில்லைதான்.

**தேவுபந்தி:** நீங்கள் உங்கள் பிடிவாதத்திலேயே பேசிக் கொண்டிருக்கிறீh.; மிர்ஜா சாகிபு றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பதை மறுக்கவில்லையா? இம்மாதிரியான மனிதன் காபிரா இல்லையா?

**காதியானி:** ஜனாப்! மிர்ஜா சாகிபு அவர்கள் றஸூலுல்லாஹி; ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் காதமுன்னபிய்யீன் என்பதை மறுக்கவில்லை. ஆனால் அதற்கு ஒரு நூதனமான கருத்து விளக்கத்தை காட்டுகிறார். அவர் சொல்கிறார்:- காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு எல்லா நபிமார்களுக்கும் இறுதியான, கடைசியான நபி என்பதாக ஜனங்கள் கருதுகிறார்கள்: இப்படிப் பொருள் வைப்பது சரியில்லை, என்கிலும் காதமுன்னபிய்யீன் என்பதற்குப் பொருள் நபிமார்களுக்கு முத்திரயைப் போன்றவர்களாவார்கள் என்பதாகும். அரசனுடைய கட்டளைக்கு அரசனின் முத்திரையைக் கொண்டு தான் மதிப்பிருக்கிறது, எந்தக் கட்டளையில் அரசனுடையை முத்திரையில்லையோ அதை மதிக்கப்படமாட்டாது. ஆகவே காத்த முன்னபிய்யீனுக்குக் கருத்தாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் 'பித்தாத்து நபியென்பதுவேயாகும். அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அல்லாஹுத்த ஆலா யாருடைய பொருட்டைக் கொண்டுமில்லாது அவன் தானே நேரடியாக நபித்துவத்தைக் கொடுத்தான். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களைத் தவிர மற்றெல்லா நபிமார்களுக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொருட்டைக் கொண்டே நபித்துவம் கிடைக்கிறது. ஆகவே எல்லா நபிமார்களும் 'பில்அற்ள்' நபிகளாவார்கள், எனவே யாராவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொருட்டைக் கொண்டில்லாது நேரடியாகவே எனக்கு நபித்துவம் கிடைத்தது என்று தாவாச் செய்வானேயானால் அவன் பொய்யனாகும். இன்னும் யாராவது நான் நபியவர்களுடைய அடிமையாகும் எனக்கு நபி; ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொருட்டினாலேயே நபித்துவம் கிடைத்ததென்று தாவாச் செய்வானேயானால் அவன் உண்மையானவனே தான். ஆகவே காத்தமுன்னபிய்யீன் என்பதற்கு மிர்ஜா சாகிபு சொல்லிய இந்த அர்த்தம் வைத்தால் நாயகம்; ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் முந்திய நபிமார்களுக்கு மட்டும் தான் காத்தம் என்று இல்லை என்கிலும், நாயகம் அவர்களுடைய காலத்திலேயானாலும் சரி ஒன்றல்ல லட்சக்கணக்காண நபிமார்கள் உண்டான போதிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பது அப்படியேதான் தரிபாடக இருக்கும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் முன்னுண்டான நபிமார்களுக்கு பின்னுண்டான நபிமார்களுக்கும் முத்திரையானவர்களாகவே இருப்பாhர்கள். இந்த கருத்தானது தேவுபந்து குழுவினர்களின்

முகம்மது காஸிம் நானூத்தவி தனது 'தஹ்திறுன்னாஸ்' எனும் நூல் 13, 14, 28-ம் பக்கங்களில் சொல்லிய கருத்தேயாகும். இக்காரணத்திற்காக மர்ஜா சாகிபு காபிராக ஆகிவிட்டார் என்றால் முஹம்மது காஸிம் நானூத்தவியும் காபிராகவே ஆவார். இவர் முஸ்லிமாகவே இருந்தால் அவரும் முஸ்லீமாகவே ஆவார்.

**தேவுபந்தி**:- நீங்கள் வீண் பேச்சுக்களையே பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நல்லது. உங்கள் மிர்ஜா சாகிபு தனது பீவியை (மனைவி) உம்முல் முஃமினின் (முஃமீன்களுக்குத் தாய்) என்று எழுதவில்லையா? இது அவரின் குப்ரு அல்லவா? சொல்லுங்கள் பார்ப்போம்?

**காதியானி**:- ஜனாப்! மிர்ஜா சாகிபு தன்னுடைய பெண்சாதியை உம்முல் முஃமினீன் என்று எழுதினார். ஆனால் உங்கள் குரு அஷ்ரப் அலி தானவியோ (அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.) உம்முல் முஃமினீன் (ஹளறத்து ஆயிஷா நாயகி றலியல்லாஹு அன்ஹா) அவர்களை கனவில் கண்டதைக் கொண்டு தனக்கு ஒரு வாலிப மனைவி வரும் என்பதாக தஃபீறு (கனவுக்குப் பொருள்) செய்துகொண்டார். அதாவது ஹிஜ்ரி 1335 ஸபர் மாதம் அல் இம்தாது எனும் மாசிகையில் எழுதுகிறார், 'ஒரு ஸாலிஹான மனிதருக்கு கஷ்பு தோற்றமானது இந்த அர்ப்பனுடைய (தானவியுடைய) வீட்டிற்கு ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வருகிறதாக, அவர் இதை என்னிடம் சொன்னார். உடனே என் மனதில் இப்படியே பட்டது (அதாவது ஒரு சிறு வயதுப் பெண் எமக்குக் கிடைக்கும். காரணம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஹளறத்துல் ஆயிஷா அவர்களை நிகாஹ் செய்யும்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு ஐம்பது வயதுக்கு அதிகமாகும். ஆயிஷா அவர்களோ ரொம்ப சிறு வயதாக இருந்தார்கள். அதே கதைதான் இங்குமிருக்கிறது. பார்த்தீர்களா, ஹளறத்து உம்முல் முஃமிமீன் ஆயிஷா நாயகி அவர்கள் வீட்டிற்கு வந்ததாக கனவில் கண்டதற்கு ஒரு வாலிபப் பெண் கிடைக்குமென்பதாக கனவில் தஃபீர் வைத்திருக்கிறார். இந்த காரணத்தினால் மிர்ஜா சாகிபு காபிரானால் உங்கள் குரு தானாவியும் காபிராகவே ஆவார். இவர் முஸ்லீமென்றிருந்தால் அவரும் முஸ்ஸிமேதான்.

**தேவுபந்தி**:- நீங்கள் வெறும் பிடிவாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள். நல்லது. இப்போது சொல்லுங்கள் பார்ப்போம். மிர்ஜா சாகிபு தனது 'இஜாலதுல் அவ்ஹாம்' எனும் நூல் 151 முதல் 163ம் பக்கம் வரையில் ஹளறத்து ஈஸா அலைஹிமிஸ்ஸலாம் அவர்களுடைய முஃஜிஸாத்தை மெஸ்மரிஸம் என்றும் வீண் விளையாட்டென்றும் சொல்லவில்லையா? இப்படி சொல்கிறவனுங்கூட காபிராகமாட்டானா? நீங்கள் இவரை காபிர் என்று சொல்லாமல் போனாலும் நான் அவரை பத்து விடுத்தம் காபிர் என்றே சொல்வேன்.

**காதியானி**: அத உங்களுடைய இஷ்டம் எவரை வேண்டமானாலும் நூறு விடுத்தமும் காபிர் என்று சொல்லுங்கள். ஆனால் நான் ஒரு விசயத்தை சொல்ல வேண்டியது அவசியம். அதாவது தேவுபந்திக் குழுவினர்களின் இமாம் (தலைவர்) மௌலவி இஸ்மாயில் திஹ்லவி தனது 'மன்சிபே இமாமத்து' எனும் நூல் 31,32-ம் பக்கத்தில் எழுதி இருப்பதாக றஷீது அஹ்மது கொங்கோஹி தனது பதாவா றஷீதிய்யாவில் எழுதுகிறார். 'அநேக கருமங்கள் அவை

நல்லடியார்களிலிருந்து வெளியாகுவதை கர்குல் ஆதது (வழக்கத்திற்கு மாற்றமான மு஭ஜிஸாத்து, கறாமத்து) என்று கணிக்கப்படுகிறது. அது போன்றது என்ன? அதைவிடவும் சக்தியானதும் பரிபூரணமானதுகள் மந்திரவாதிகள் சூனியக்காரர்களிலிருந்தும் உண்டாவது சாத்தியமானதாகவே ஆகும்'. கருத்தாவது அநேக கருமங்கள் அவை நால்லடியார்களிருந்து உண்டாவதை மு஭ஜிஸாத்து என்று நினைக்கப்படுகிறது. அம் மாதிரியென்ன அதைவிடவும் அதிகமான சக்தியான விசயங்களை சூனியக்காரர்களும், மந்திரவாதிகளும் செய்து காட்ட முடியும். வழக்கத்திற்கு மாற்றமானது என்பதில் எங்ஙனம் ஒப்புக் கொள்வீர்கள?;, அதனாலேயே நான் மு஭ஜிஸாத்தைப் பற்றி மாத்திரம் பேசுகிறேன். இப்பொழுது சொல்லுங்கள் மிர்ஜா சாகிபு ஈஸா (அலைஹிமிஸ் ஸலாம்; அவர்களுடைய மு஭ஜிஸாக்களை மெஸ்மரிஸம் என்பதாகச் சொல்லியிருப்பதனால் காபிராகி விட்டார் என்றால் உங்களுடைய குரு மவுலவி இஸ்மாயில் திஹ்லவி மந்திர சூனியத்தை மு஭ஜிஸாத்தை விடவும் சக்திவாய்ந்தது, பரிபூரணமானது என்று சொல்லி காபிராகி விட்டார். இவர் காபிர்; இல்லையென்று சொன்னால் அவர் (மிர்ஜா சாகிபு) எங்ஙனம் காபிராகிவிடுவார்?.

**தேவுபந்தி:-** நீங்கள் மென்மேலும் மேலும் உங்கள் பிடிவாதத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். என்ன மி;ர்ஜா சாகிபு நபித்துவத்தை தாவாச் செய்யவில்லையா? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பிறகு தன்னை நபி என்று தாவாப் பண்ணுகிறவன் காபிர் இல்லையா?

**காதியானி:-** (சிரித்துக் கொண்டு) பாருங்கள் நீங்கள் ஒவ்வொரு பேச்சுக்கும் எரிச்சல்பட்டுக் கொண்டும், கோபப்பட்டுக் கொண்டுமிருக்கிறீர்கள். நான் சரியாக உங்களுக்கு விடை கொடுத்துக் கொண்டே இருக்கிறேன். நான் உங்களை விடமாட்டேன.; நல்லது. கேளுங்கள், அல்இம்தாது எனும் மாசிகையின் ஹிஜ்ரி 1336 சபர் மாத பத்திரிக்கையில் ஒரு மனிதருடைய கனவைப் பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது. அதாவது, அவர் கனவில் 'லா இலாஹ இல்லாஹு அஷ்ரப் அலி றஸூலுல்லாஹ்' என்று ஓதினார். விழித்த பிறகு அல்லாஹும்ம ஸல்லி அலா செய்யிதினா வனபிய்யனா வ மவுலானா அஷரப் அலி என்று ஓதினார். பகல் பூராவும் இப்படியே ஓதிக் கொண்டிருந்தாராம். அவர் இந்த நிகழ்ச்சியை தனது குருவான அஷ்ரப் அலிதானவி சாகிபுக்கு எழுதிக் காட்டுகிறார். அதற்கு தானவி சாகிபு பின்வருமாறு பதில் எழுதிகிறார். இந்தச் சம்பவத்தில் சாந்தி இருக்கிறது. அதாவது எவர் பக்கம் நீர் மீளுகிறீராரோ அவர் (தானவி)அல்லாஹ் உதவியால் மார்க்கத்தைத் தொடர்ந்தவராகும்' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பின் நபித்துவத்தைத் தாவாச் செய்வது குப்று என்று தானவி சாகிபு அறிந்திருந்தாரேயானால், நீ காபிராகி விட்டாய். நீ பகல் முழுவதும் என்னை நபியென்று சொல்லிக் கொண்டிருந்தாய், நீ இஸ்ஸலாத்தை விட்டும் அப்புறப்பட்டு விட்டாய். நீ கலிமாச் சொல்லி புதிதாக முஸ்லிமாக வேண்டும். உனக்கு மனைவியிருக்குமேயானால் அவள் உன்னுடைய நிகாஹை விட்டும் நீங்கி வி;ட்டாள். அவளைத் திரும்ப நிகாஹ் செய்ய வேண்டும். இல்லையானால் அவளோடு சேர்க்கை செய்வது ஜினாவாக ஆகும். பிள்ளை பிறந்தால் ஹறாமில் பிறந்த பிள்ளையாகும்' என்று ஜவாபு கொடுத்திருப்பார். ஆனால் உங்கள் குரு தானவி இம் மாதிரியெல்லாம் கொஞ்சமும்

எழுதவில்லை என்கிலும் அவருக்குச் சமாதானம் சொல்லி எழுதுகிறார். அதாவது இச்சம்பவத்தினால் உனது குரு மார்க்கத்தைப் பின்பற்றியவர் என்றுபொருள்; என்பதாகச் சொல்கிறார். மேலும் அதை அந்தப் பத்திரிக்கையிலும் பிரசுரித்திருக்கிறார். இந்த மாசிகையைத்தான் நோக்கமும் கருத்தும் உம்மத்து முஹம்மதிய்யாக்களுடைய (முஸ்லீம்களுடைய கொள்கைகளையும், குணங்களையும் சீர்திருத்தம் செய்வதாகும் என்று சொல்லப்படுகிறது. இதனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்குப் பிறகு தான் நபி எனத்தாவாச் செய்வதைக் குப்று என்பதாகத் தானவி சாகிபு ஒப்புக்கொள்ளவில்லை என்றே தெரியவருகிறது. மேலும் பத்திரிக்கையில் அச்சிட்டு வெளிப்படுத்தியதினால் தானவி சாகிபு மார்க்கத்தைப் பின்பற்றியவர் என்பதற்குச் சான்று அவரை நபி என்று சொல்ல வேண்டுமென்று மற்ற முரீதீன்களுக்கும் அழைப்புக் கொடுக்கப்படுகிறது. அதாவது நான் மார்க்கத்தை பின்பற்றியவன் என்பது பற்றி எந்த முரீதுக்குச் சாந்தியுண்டாக வேண்டுமென விருப்பமிருக்கிறதோ அவர்; இம் மறைப்படியே அமல் செய்யவேண்டும் என்பதாகும.; மேலும் மார்க்கத்தைப் பின்பற்றுவதென்பது நபித்துவத்துக்கு சொஞ்சமும் வித்தியாசமானதல்லை, என்பதுவுமாகும். எங்களுடைய மிர்ஜா சாகிபுவோ எனக்கு றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றியதின் பொருட்டினால் நபித்துவத்தைக் கொடுக்கப்பட்டது என்றும், மேலும் மார்க்கத்தைப் பரிபூரணமாகப் பின்பற்றுவதாகிறது றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் நபியாகவும,; றஸூலாகவும் இருந்து உம்மத்துக்களை நேர்வழியில் அழைத்துக் கொண்டிருந்தது போல் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அடிமையும் நாயகத்தின் பொருட்டால் நபித்துவத்தைப் பெற்றுக் கொண்டு ஜனங்களுக்கு நேர் வழி காட்டவேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். தானவி சாகிபு தன்னை தன்னை மார்க்கத்தை பின்பற்றியவர் எனச் சொல்வதன் கருத்தாவது நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு அடிமையாக இருந்து அவர்களை முற்றிலும் பின்பற்றியதினால் அவர்கள் பொருட்டைக் கொண்டு எனக்கு நபித்துவம் கிடைத்தது என்பதுவேயாகும். மிர்ஜா சாகிபு இந்த காரணத்தினால் காபிரென்றானால் உங்கள் தானவி சாகிபும் இதே காரணத்தினால் காபிராகவேயாவார். நீங்கள் இதுவரை (தானவியை) முஸ்லீம் என்றும் நம்புவீர்களேயானால் நான் அவரை (மிர்ஜா சாகிபை) முஸ்லீம் என்றே நம்பவேண்டி வரும்.

**தேவுபந்தி:-** ஜனாப். நான் எவ்வளவோ கொஞ்சமாக சொல்லுகிறேன். நீங்கள் உங்கள் வீண் பேச்சிலேயே நேரத்தைப் போக்குகிறீர்கள். கேளுங்கள் ஜனாப், தேவுபந்து உலமாக்கள் எல்லோர்களுமே மிர்ஜா சாகிபுவை காபிர், முர்தத்து என்று பத்வா (மார்க்கத் தீர்ப்பு) கொடுத்திருக்கிறார்கள். பின்னர் நாம் ஏன் மிர்ஜாவை காபிர் என்று சொல்லாமலிருப்போம்.?

**காதியாணி:** ஜனாப்! நல்லாக் கவனித்துப் பேசுங்கள.; இது என்னுடைய பேச்சுக்கு ஜவாபாகாது. நானும் சொல்கிறேன். பரேலி உலமாக்கள் பூராவும் தேவுபந்தி உலமாக்கள் அத்தனை பேர்களையும் காபிர் முர்தத்து என்று பத்வா கொடுத்திருக்கிறார்கள்.

**தேவுபந்தி:** ஜீ! ஹஜ்ரத்! நீங்கள் என்னுடைய கருத்தை விளங்கிக் கொள்ளவில்லை. மிர்ஜா சாகிபு காபிர் முற்தத்து என்பதாக பரேலி உலமாக்கள் அத்தனை பேர்களும், தேவுபந்தி உலமாக்கள் அத்தனை பேர்களும் பத்வா கொடுக்கிறார்கள். இரண்டு கூட்டத்தார்களும் மிர்ஜாவை காபிர் முற்தத்து என்று சொல்கிறார்கள். இப்பொழுது உங்களுக்குப் புரிந்ததா சொல்லுங்கள்.

**காதியானி:-** நான் இப்பொழுதும் உங்கள் கருத்தைப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறேன். கேளுங்கள். தேவுபந்தி உலமாக்களை காதியானிகள் அத்தனை பேர்களும், பரேலி உலமாக்கள் அத்தனை பேர்களும் காபிர்களென்று சொல்கிறார்கள். காதியானிகள் தேவுபந்திகளை காபிர்களென்று சொல்வதானது இவர்கள் மிர்ஜாவை நபியென்று ஒப்புக்கொள்ளாதற்காக. பரேலி உலமாக்கள் தேவுபந்திகளைக் காபிர்கள் என்று சொல்வதாகிறது தேவுபந்திகள் அல்லாஹ்வையும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களையும் குறைவாகப் பேசுவதினாலேயாகும.; ஆகவே உங்களுடைய கருத்து எவர்களை இரு கூட்டத்தார்கள் ஏகோபித்துக் காபிர், முற்தத் என்று சொல்லுகிறார்களோ அவர்கள் அவசியம் காபிர் முற்தத்துகள் தான் என்பதானால், நீங்கள் உங்களையும் உங்களுடைய எல்லா தேவுபந்திகளையும் காபிர், முற்தத்துகள் என்று ஒப்புக்கொள்ளுங்கள்.

**தேவுபந்தி:-** நீங்கள் எப்படியானாலும் ஒப்புக் கொள்ளவே மாட்டீர்கள.; கேளுங்கள் மக்கா முகற்றமா மதீனா முஅள்ளமாவிலுள்ள சங்கையான எல்லா உலமாக்களும் மிர்ஜாவையும் அவரை ஒப்புக் கொண்டவர்களையும் காபிh,; முற்தத்து என்பதாக பத்வாக் கொடுத்திருக்கிறார்கள்.

**காதியானி:-** மக்கா, மதீனாவிலுள்ள எந்த உலமாக்கள் எங்கள் பேரிலும் எங்கள் மிர்ஜாசாகிபு பேரிலும் காபிர்களென்று பத்வாக் கொடுத்திருக்கிறர்களோ! அந்த உலமாக்களேதான் எல்லா தேவுபந்தியாக்கள் பேரிலும் உங்கள் சற்குருக்களான றஷீது அங்மது கொங்கோஹி, முகம்மது காசிம் நானுத்தவி, கலீல் அஹ்மது அம்கேட்டி, அஷ்ரப் அலிதானவி இவர்கள் பேரிலும் காபிர் முற்தத்துகள் என்று பத்வாக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் அதை ஒப்புக்கொள்வீரகளேயானால், இதையும் ஒப்புக்கொள்ளுங்கள.; இந்த பத்வா உங்களிடத்தில் பிழையாக இருக்குமேயானால் அந்தப் பத்வா சரியானதுதான் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது.?

பெரியாரவர்கள் சொல்லுகிறார்கள்: இதுவரை சம்பாஷணைகள் நடத்து கொண்டு வந்தது. தேவுபந்தி சாகிபு அடியோடு மட்டாங்கியாகிவிட்டார். காதியானி சாகிபோ (அவர் தேவுபந்திக் கொள்கைகளை எல்லாம் நன்றாய்த் தெரிந்தவராக இருப்பதனால் அவர் ஏற்கனவே தேவுபந்தியாக இருந்திருக்கக்கூடும்) சரியானப்படி ஆதாரங்களை கொண்டு வாய்ப்புக் கொடுத்து தேவுபந்தி சாகிபை ஒரே அடியாகத் திணர வைத்து விட்டார். இப்பொழுது தேவுபந்தி சாகிபு நிர்பந்தத்திலாக கடினவார்த்தைகளை உபயோகிப்பதிலேயும் ஏச்சுப் பேச்சுகளிலேயும் தொடுத்துவிட்டார். ஓடிக் கொண்டிருக்கும் ரயிலில் அடிதடி அசம்பாவிதம் உண்டாக

தொடங்கிவிட்டது. இதை பாhத்து எனக்கு வாளாவிருக்க முடியவில்லை நான் இருவருக்கும் சொல்லி அவர்களுக்குள் அடிதடி ஏற்படாமல் தடுத்தவிட்டேன்.

**பெரியார்:** நீங்கள் இருவர்களும் ஒன்றுக்கொன்று ஏன் சண்டை போட்டுக் கொள்கிறீர்கள். என்னிடத்தில் நீங்கள் இருவர்களும் உண்மையேதான் சொல்கிறீர்கள்.

**தேவுபந்தி:** (கோபத்தோடு) நான்தான் நிச்சயமாக உண்மை சொல்கிறேன். ஆனால் நீங்கள் எந்த மற்தூது காதியானியையும் உண்மை சொன்னீர்களென்று எப்படிச் சொல்லலாம்? நீங்களும் காதியானித்தான் போலும்.

**காதியானி:-** நீங்கள் அவர் சே;கைக் கவனிக்காதீர்கள.; உங்கள் தீர்ப்பை (ஜட்ஜ்மென்டை) சொல்லுங்கள்.

**பெரியார்:** தேவுபந்தியை பார்த்து, அல்ஹம்து லில்லாஹ் நான் காதியானியுமல்லை, தேவுபந்தியுமல்லை. நான் ஸூன்னி ஹனபியாகும். நீங்கள் இருவர்களும் பேசிக்கொண்டிருந்தீர்கள். நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் சொன்னீர்கள், காதியானி காபிர் என்று நான் சொல்கிறேன். இந்த விசயத்தில் உண்மை சொன்னீர்கள். கண்டிப்பாக காதியானி காபிர்தான். அந்த சகோதரர் சொன்னார், தேவுபந்தி காபிர் என்று. நான் சொல்கிறேன். இந்த விசயத்தில் அவரும் உண்மைதான் சொன்னார். நிச்சயமாக தேவுபந்தி காபிரேதான். மிர்ஜா காதியானி விசயத்தில் என்னென்ன குப்ரியத்தான கருமங்கள் அவரில் இருப்பதாக நீங்கள் சொல்லிக் காட்டினீர்களா சந்தேகமில்லாது அவைகளெல்லாம் குப்ரியத்தானதுகளேயாகும். ஆனால் நீங்கள் பதில் கொடுக்க முடியாமல் ஆஜிஸாகிக் போனதற்குக் காரணம் நீங்கள் எந்த குப்ரியத்தான கருமங்களைப் பொறுத்து மிர்ஜாவைக் காபிர் என்று சொல்கிறார்களோ அதே போன்ற இல்லை, அதை விடவும் மேலான குப்ரியத்தான கருமங்களில் உங்கள் குருமார்களில் இருப்பதாக எடுத்துக்காட்டும் போது நீங்கள் அவர்களைக் காபிர்கள் என்று சொல்கிறீர்களில்லை. இதனாலே உங்களை இந்தக் காதியானிசாகிபு மிகைத்துவிட்டார். உங்களுக்கு ஜவாபு சொல்ல முடியாமல் போய்விட்டது. என்னிடத்தில் நீங்கள் இருவர்களும் காபிர்கள்தான். எந்த ஆதாரங்களைக் கொண்டு மிர்ஜா காதியானி காபிர் முற்தத்து என்பது நிரூபணமாகிறதோ (ருஜூவாகிறதோ) அதே காரணத்தைக் கொண்டுதான் தேவுபந்திகளும் காபிர் முற்தத்துகள் என்பது நிரூபணமாகிறது.

என்னுடைய இந்தப் போதனைகளைக் கேட்டுவிட்டு இருவர்களும் பிரமித்து வாய் பொத்தி ஒடுங்கிவிட்டார்கள் பின்னர் இருவர்களும் ஒருவருக்கொருவர் தர்க்கம் தகறாரில்லாது இருந்து விட்டார்கள். பிரயாணமும் சந்தோசமாக இனிது முடிவடைந்து. வலில்லா ஹில் ஹம்து.

இப்படிக்கு,

**ஏம்.அலவி ஆமிர்**

ஹிஸ்புல்லஹ் சபை, 152, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.